# ஒப்படைப்பு

**வகுப்பு : 7** **பாடம் : தமிழ்**

## இயல்- 1

### <u>பகுதி – அ</u>

**I. ஒரு மதிப்பெண் வினாக்கள்.**

1. தமிழ்மொழியின் குறிக்கோளாக வெ.இராமலிங்கனார் கூறுவது யாது?

அ) பொய்யாமை ஆ) கொல்லாமை

இ) எள்ளாமை ஈ) தள்ளாமை

2. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் யார்?

அ) வெ.இராமலிங்கனார் ஆ) ஈ.வெ.இராமசாமி

இ) பாரதியார் ஈ) இராமலிங்க அடிகளார்

3. பெருஞ்செல்வம் – இச்சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது எது?

அ) பெரு+செல்வம் ஆ) பெருஞ்+செல்வம்

இ) பெரிய+செல்வம் ஈ) பெருமை+செல்வம்

4. முல்லைக்குத் தேர் கொடுத்தான் வேள்பாரி
வான் முகிலினும் புகழ் படைத்த உபகாரி- இவ்வடிகளில் 'வள்ளல்' என்னும் பொருள் தரும் சொல் யாது?

அ) கொடுத்தான் ஆ) உபகாரி இ) முகில் ஈ) வேல்பாரி

5. மொழியின் இரண்டாம் நிலை யாது?

அ) பேசுதல், எழுதுதல் ஆ) கேட்டல், பேசுதல்

இ) படித்தல், எழுதுதல் ஈ) உணர்தல், பேசுதல்

6. எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உளவாகும் - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் யாது?

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) ஒன்றல்ல இரண்டல்ல ஈ) எங்கள் தமிழ்

7. குறில் எழுத்துகளைக் குறிப்பதற்குப் பயன்படும் அசைச்சொல் யாது?

அ) காரம்  ஆ) கரம்  இ) கான்  ஈ) கேனம்

8. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) பட்டு  ஆ) கன்று  இ) பந்து  ஈ) சங்கு

9. தற்போது உரைநடை வழக்கில் இல்லாத இலக்கணம் எது?

அ) குற்றியலுகரம்  ஆ) குற்றியலிகரம்

இ) முற்றியலுகரம்  ஈ) ஐகாரக்குறுக்கம்

10. குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும்போது பெறும் மாத்திரை அளவு யாது?

அ) ஒன்று  ஆ) இரண்டு  இ) கால்  ஈ)அரை

## பகுதி – ஆ

## II. குறுவினா

1. வெ.இராமலிங்கனார், ஏன் காந்தியக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்?

2. நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள் சிலவற்றைக் எழுதுக.

3. ஒன்றல்ல இரண்டல்ல-பாடலில் இடம்பெற்றுள்ள நூல்களின் பெயர்களைக் கூறுக.

4. மொழியின் முதல்நிலை யாது?

5. தமிழை இரட்டைவழக்கு மொழி என அழைக்கக் காரணம் யாது?

6. எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

7. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் ஏதேனும் ஒன்றனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

## பகுதி – இ

## III. பெருவினா

1. உடுமலை நாராயணகவி குறித்துக் குறிப்பு வரைக.

2. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**<u>பகுதி – ஈ</u>**

## IV.செயல்பாடு

**பின்வ ரும் பாடலை ப் படித்து, வினாக்க ளுக்கு விடை யளிக்க .**

"தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே !
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே !
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே !
உணர்வினுக் குணர்வ தாய் ஒளிர்தமிழ் மொழியே !
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே !
மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே !
தானனி சிறப்புறும் தனித்தமிழ் மொழியே !
தழைத் தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே !"

வினாக்கள்

1. பாடலில், தமிழுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழிகளை எழுதுக.

**விடை :**

2. எதுகை நயத்திற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

**விடை :**

3. வண்டமிழ் – இச்சொல்லைப் பிரித்தெழுதுக.

**விடை :**

4. நிரப்புக. நம் செந்தமிழ் மொழி ___________ விட இனிமையானது.

**விடை :**

5. மக்களுக்கு மொழி இன்றியமையாதது என்பதை உணர்த்தும் வரி எது?